சுருக்கம்

பணியமைப்பு - வேளாண்மை - உழவர் நலத் துறை - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி D. ஆர்த்தி, இளநிலை உதவியாளராக (பி.அ.) கருணை அடிப்படையில் பணி நியமனம் - தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15 மற்றும் பிரிவு 28(2) ஆகியவற்றை தளர்த்தி, 7.1.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வேநி9) துறை

அரசாணை (3டி) எண். 8

நாள்: 19.01.2022
பிலவ வருடம்
தை திங்கள் 6,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.அநிபி1/43012/2020, நாள் 21.11.2020.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேளான் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையரின் கட்டுப்பாட்டில், திண்டுக்கல், வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) அலுவலகத்தில், உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது 29.07.2010 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு வி. துரைராஜ் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது மகள் திருமதி D. ஆர்த்தி என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதாகவும், அதனடிப்படையில் தனியருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக (பி.அ.) தற்காலிகமாக பணி நியமனம் வழங்கப்பட்டதாகவும், அதனடிப்படையில், தனியர், சேலம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் 07.01.2019 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்து, தனியரின் பணியினை 07.01.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, 29.07.2010 அன்று பணியிடை மரணமடைந்த அரசு ஊழியர் திரு வி. துரைராஜ் என்பவரின் மகள் திருமதி D. ஆர்த்தி என்பவருக்கு, பணி நியமன நாளில் திருமணம் ஆகியுள்ளதால், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 15 மற்றும் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் வழங்க ஏதுவாக தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2) ஆகியவற்றை, மேற்காணும் சட்டத்தின் பிரிவு 58-இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தளர்வு செய்து, தனியரின் பணியினை 07.01.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பி.அ.) பதவியில் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண் 23355 / க்யூ.1 / 2021-1, நாள் 03.01.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண் 283 / ஜி1 / 2022-1, நாள் 10.01.2022-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்

வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இ).
திருமதி D. ஆர்த்தி, இளநிலை உதவியாளர் (பி.அ.)
வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத் துறை, சென்னை-5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்பு)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்

மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.22684 / வேநி9 / 2020.
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்